# திருமலைத்தீபம்

# Thirumalaitheepam

சுடர் 07
விலை 20/=

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

ஆவணி இதழ்~2014 ,ஆரம்பம் 15மாசி~2013. திருமறைக்கல்வி நடுநிலையம், இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை. தீபம்~07.

E-mail- catetcota@gmail.com T.P- 026 2221022, 0263202532


"ஆவியார் அனைத்திலும் ஒத்துழைக்கிறார்."

## இலங்கைக்கான பாப்பரசரின் புதிய பிரதிநிதி

திருத்தந்தை பிரான்சிஸ் கடந்த மாதம் 22ஆம் திகதி இதுவரை கொஸ்தா ரிக்காவின் பாப்பிறை பிரதிநிதியாக இருந்த பேராயர் மேதகு பியரே ங்குஜேன் வன்டொட் ஆண்டகையை எமது நாட்டுக்கான திருத்தந்தையின் பிரதிநிதியாக நியமித்துள்ளார்.



அவரைப் பற்றிய விபரங்கள் :

நாடு : வியட்நாம்
பிறந்த திகதி : 1949.04.15
குருப்பட்டம் : 24.03.1974
உயர்கல்வி : இறையியல் கலாநிதி
தெரிந்த மொழிகள் : தாய்மொழி , இத்தாலி, பிரஞ்ச், ஆங்கிலம், ஜேர்மன் மொழிகள்
பணி புரிந்த இடங்கள் : பெனின், மத்திய ஆபிரிக்கா குடியரசு, ஷாட் பனாமா, பிரேசில், சைரே, ருவண்டா, டோகோ, பிரான்ஸ், கொஸ்தா ரிக்கா
பாப்பிறை பிரதிநிதியாக : பெனின் ராகோ - 2002 - 2005, மத்திய ஆபிரிக்கா குடியரசு - 2005 - 2008 கொஸ்தா ரிக்கா - 2008 - 2013, இலங்கை - 2014

## பொன் விழா நாயகன்



அருட் சகோதரர் மைக்கல்
அன்புப் பணிச்சகோதரர் சபை

அன்புப் பணிச் சகோதரர் வில்பிரட் மரியதாஸ் மைக்கல்
பெற்றோர் : திரு ஜே.ஏ வில்பிரட்
திருமதி வி. அஞ்சலினா பிள்ளை
பிறப்பு : 06.04.1944
பிறப்பிடம் : நெடுந்தீவு
அருட்சகோதரரானது : 02.06.1963

படிப்பும் பணியாற்றிய இடங்களும், வருடமும் :

பாடசாலை பருவம்: கல்முனை தூய பற்றிமா கல்லூரி
1956 - 1960 உயர் கல்வி C.F கல்லூரி, கல்முனை
1966 - 1967 ஆசிரியராக ம/தூய மைக்கல் கல்லூரி
1968 - 1971 மேற்படிப்பு பம்பாய் தூய பிரான்சிஸ் தொழிநுட்பக் கல்லூரி
1971 - 1978 Boy's Town சத்துருக்கொண்டான் தொழிநுட்பக் கல்லூரி
1979 - 1985 தூய சூசையப்பர் தொழிநுட்பக் கல்லூரி திருகோணமலை
1987 - 1994 கணணி நிலையம் மட்டக்களப்பு
1995 - 2014 தூய சூசையப்பர் தொழிநுட்பக் கல்லூரி திருகோணமலை

இவருக்காக செபிப்போம் வாழ்த்துவோம்.

## பாதிக்கப்பட்ட அடித்தள கிராமமக்களை முன்னேற்றுவது தொடர்பான பயிற்சிப்பாசறை.







தொடர்ச்சி 6ம் பக்கம்

## வரவேற்கின்றோம் வாழ்த்துகின்றோம்




மேற்படிப்பிற்காக உரோமிற்கு சென்ற அருட்பணி ஜோர்ஜ் திசநாயக்கா அடிகளார் மீண்டும் எமது மறைமாவட்டத்திற்கு திரும்பியுள்ளார். அவரை வரவேற்கின்றோம், வாழ்த்துகிறோம், மேலும் அவரது பணிவாழ்வு சிறப்புற [illegible]

## நகரமுதல்வர் விருது 2014





திருகோணமலை நகராட்சிமன்ற கௌரவ தலைவர் திரு க.செல்வராஜா அவர்களினால் 28.06.2014 அன்று நகரமுதல்வர் விருது 2014 வழங்கப்பட்டன. எமது மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி ரி.கிங்ஸ்லிறொபட் அவர்களுக்கும் பேராலயப் பங்கைச் சேர்ந்த திரு தா.பி சுப்பிரமணியம் அவர்களுக்கும் இவ்விருது வழங்கப்பட்டது. எமது மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி ரி. கிங்ஸ்லிறொபட் அவர்களுக்கு ஆன்மீக துறையில் கிறீஸ்தவ சமய வளர்ச்சிக்கான விருதும், திரு தா.பி சுப்பிரமணியம் அவர்களுக்கு கலை இலக்கிய துறையில் சிறந்த வித்தகர் விருதும் இவர்களுக்கு வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களோடு பேசுகிறேன்..

வருடத்தின் ஏழு மாதங்கள் எப்படியோ ஓடி மறைந்துவிட்டன. இப்போது எட்டாவது மாதத்திறகுள் அடிவைத்துள்ளோம். பொதுவாக மக்கள் மனதிலே அமைதி சமாதானம் என்பதை தேடும் மன உணர்வே அதிகரித்துக் கொண்டிருப்பதை உணர முடிகிறது.

குறிப்பாக இப்போது எங்கு பார்த்தாலும் ஜெனிவா மகாநாடு பற்றிய பேச்சே பரவலாகப் பேசப்பட்டுக் கொண்டிருக்கிறது. என்னதான் நடக்கப் போகின்றது என்பது மக்களின் கேள்விக்குறியாக இருக்கின்ற போது என்ன நடந்தாலும் எது நடந்தாலும் எங்களுடைய நிலைகளை நாங்கள் விட்டுக் கொடுக்கப் போவதில்லை என்பது அரசின் ஒரே பிடியா-கவும் பிடிவாதமாகவும் இருக்கின்றது ஆனால் உலக நாடுகளோடு பகைமையூட்டும் பட்சத்தில் நமது நாடு பாரிய பின் விளைவுகளுக்கு முகம்கொடுக்க நேரிடுமென்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

அதேவேளை ஒருசில ஆன்மீகவாதிகளின் எல்லை மீறிய, அத்துமீறிய பேச்சுக்களால் கூட நாட்டிற்கு அபகீர்த்தி ஏற்பட்டுக் கொண்டிருப்பது வேதனைக் குரியதாகும் 'பேசுமுன்னர் "பேச்சு" பேசப் போகின்றவர்க்கு உரியது ஆனால் அவர் பேசிய பின்னர் அப்பேச்சானது கேட்பவருக்கு உரியதாகின்றது.' எனவே எதைப் பேசுகின்றோம் எப்படிப் பேசுகின்றோம், எங்கே பேசுகின்றோம் யாரோடு பேசுகின்றோம் என்பதை நினைவிற்கொள்ள வேண்டும்.

யுத்தம் முடிவடைந்து நாட்டிலே அமைதி ஏற்பட்டுள்ள தென்று கூறிக்கொண்டிருக்கின்றோம் ஆனால் இப்போதும் மதவழிபாட்டுத் தலங்கள் உடைத்தழிப்பு அத்துமீறிய குடியேற்றங்கள், மதங்களை மையப்படுத்திய கலவரங்கள் முடியாமல் தொடர்ந்து கொண்டிருக்கும்போது "இங்கு அமைதி நிலவுகின்றது" என கூறமுடியுமா? எத்தனையோ வசதிகளுடன் எப்படியோ வாழ்ந்து வந்த சம்பூர் மக்கள் இப்போதும் கிளிவெட்டி பிரதான வீதியிலே அமைந்துள்ள அகதிமுகாமிலே எத்தனையோ ஆண்டுகளைக் கடந்து அகதிகளாக முடங்கிக் கிடப்பது வேதனைக்குரியதே வெறுமனே வெற்றிகளை மட்டும் நினைந்து விழாவெடுத்தால் மட்டும் போதாது வீழ்ந்துவிட்ட வாழ்வுகளை மீண்டும் எழவைத்து வாழவைத்துக் காட்டினால் மட்டுமே உண்மையான வெற்றி எனக் கூறமுடியும், ஆவணியிலே மனிதர்களாக பிறந்து புனிதர்களான பலரை நாங்கள் நினைவு கூறுகின்றோம்.

அதேவேளை அன்னை மரியாளுடைய விண்ணேற்பின் நாளை மறந்துவிட முடியாது அன்னையின் அடிச்சுவடுகளை பின்பற்றி வாழ நாம் அனைவரும் அழைக்கப்பட்டிருப்பதை நினைவிற் கொள்வோம்.

எனவே ஆன்மீக நிலைகளில் மட்டுமல்ல அரசியல் நிலைகளிலும் "வெற்றியின்" நிலைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்பதைப் போன்று, அப்பணியானது உண்மையான பணியாகவும். நியாயமான பணியாகவும், நீதியான பணியாகவும்,நேர்மையான பணியாகவும் அமையும் போது அதுவே பணிவாழ்வின் முழுமையான வெற்றியாகும். எந்த மதங்களும் தவறாக வழிகாட்டுவதில்லை எனவே நல்லவைகளை நல்வழிகளை, நற்போதனைகளை நாமும் கடைபிடிப்போம். நம்மோடு வாழும்அனைத்து மக்களும் கடைபிடித்து வாழ நாமும் துணை நிற்க வேண்டு மெனக் கூறிக்கொண்டு மீண்டும் உங்களோடு பேசுவேன்.

அருட்பணி NC அருள்வரதன்

# இறந்த பின்னர் மீண்டும் உயிர்பெற்ற அருட்தந்தை



எனக்கு நன்கு அறிமுகமான சிலரும் இங்கே இருந்தார்கள். ஆயினும் அவர்களை இன்னாரென வெளிப்படுத்த எனக்கு அனுமதியில்லை. இவர்களில் சிலரின் முக்கிய பாவங்கள் **பகைமை, மன்னிப்பளிக்காது பழிவாங்குதல், கருச்சிதைவு செய்தல், ஓரினச்சேர்க்கை, விபச்சாரம், களவு செய்தல், கொலை செய்தல், நலம் பெற முடியாத நோயாளரைக் கொல்லுதல், பொறாமை, மூட நம்பிக்கையை ஏற்றுக்கொள்ளுதல், இறை நிந்தனை செய்தல்** ஆகியனவாகும்.

இறைதூதர் இவற்றை எனக்குக் காட்டி இவர்கள் தமது பாவங்களுக்காக மனம் வருந்தி அவற்றிலிருந்து விலகியிருந்தால் இந்த நகரத்திற்கு வந்திருக்காது உத்தரிப்பு ஸ்தலத்திற்கு போயிருக்கலாம் என கூறினார். மேலும், தாம் செய்த பாவங்களுக்காக உண்மையாகவே இவ்வுலகிலேயே துன்புற்று, தூய்மையடைந்து மரணித்தபின் உத்தரிப்பு ஸ்தலத்திற்கு செல்லாது நேராக விண்ணகத்திற்கு செல்லலாம் என்றும் கூறினார். நான் ஆச்சரியம் அடைந்த ஒரு நிகழ்வு யாதெனில் இங்கே **(நரகத்தில்)** நான் கொஞ்சமுமே எதிர்பார்க்காத குருக்கள் மட்டுமன்றி – ஆயர்களையும் பார்க்க நேர்ந்தது ஆகும். அவர்களின் தவறான படிப்பினைகளால் மக்களை பிழையாக வழிநடத்தியதாலும் மக்களுக்கு முன்மாதிரிகையா யிருக்கத் தவறியதாலும் அவர்கள் இங்கே வர நேர்ந்தது.

**உத்தரிப்பு ஸ்தலம் :** இந்த பயங்கர காட்சியைக் கண்டதன் பின்னர் எனது காவல்தூதர் என்னை அடுத்ததாக உத்தரிக்கும் ஸ்தலத்திற்குக் கொண்டு சென்றார். இங்கேயும் துன்புறுத்தல்கள் 7 பிரிவுகளாக இருந்ததோடு, தாங்கிக் கொள்ள முடியாத வெப்பம் மிக்க தீச் சுவாளை இருந்தது. ஆனால் இந்த நெருப்பு நரகத்தைப் போன்று கொடியதாக இருக்கவில்லை. சண்டையும் இங்கே இருக்கவில்லை. இங்குள்ளவர்களின் கொடிய வேதனை யாதெனில் இறைவனின் முகத்தைக் காண்பதற்கு இவர்களுக்கிருந்த தணியாத ஆசையாகும். இங்கிருந்த சிலரும் நரகத்தில் இருந்தவர்களைப் போலவே பாவம் செய்திருந்தார்கள்.

ஆயினும் இவர்களின் வேறுபாடு யாதெனில் இவர்கள் இறப்பதற்கு முன் உண்மையாகவே மனம் வருந்தி மன்னிப்பு பெற்று இறைதந்தையின் அரசில் நுழைவதற்கு தகுதி பெற்றிருந்ததால் இவர்கள் நெருப்பின் வெப்பத்தினால் துன்புற்றாலும் என்றாவது ஒரு நாள் இறை தந்தையிடம் செல்லலாம் என்ற உறுதியான எதிர்பார்ப்பு இருந்தது. இதனால் இவர்கள் பெரிதும் ஆறுதல் அடைந்தார்கள். இங்கு – உத்தரிப்பு ஸ்தலத்தில் உள்ள சில ஆன்மாக்களுடன் பேசுவதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. தாம் கூடிய சீக்கிரம் விண்ணகத்திற்கு செல்ல வேண்டும் என்று தமக்காக செபிக்குமாறு கேட்டார்கள். மற்றவர்களையும் செபிக்குமாறு சொல்லச் சொன்னார்கள். அவ்வாறு அவர்கள் மீட்புக்காக நாம் செபத்தினால் உதவி செய்யும் போது அவர்களும் மோட்சத்திற்கு **(விண்ணகத்திற்கு)** சென்ற பின் எங்களுக்காக செபத்தின் மூலம் பரிந்துரைத்து பெரும் காரியமாற்றுவார்கள்.

எனது காவல் தூதரின் அழகை வர்ணிப்பதற்கு வார்த்தைகள் இல்லை. அவர் எனது நிலையான உதவியாளராயிருப்பதோடு இப்போதும் எனது குணமளிக்கும் வழிபாடுகளின் போது எனக்கு துணைபுரிகிறார். நான் செல்லும் இடங்களெல்லாம் அவர் என்னோடு இருப்பதை நான் அனுபவத்தில் உணர்ந்தேன். நிதமும் எனது வாழ்வில் அவர் எனக்கு அளிக்கும் பாதுகாப்பிற்காக அவருக்கு நன்றிகள் பல கூறுகிறேன்.

தொடரும்.......

# மரியே மாபெரும் தாய்

"அருள் மிகப் பெற்றவரே வாழ்க" என்று
அன்னை மரியை வாழ்த்திப் பாடி
ஆண்டவரின் தூதர் கபிரியேல் கவிவடித்ததே
அன்னை மரி பக்திக்கான வருகைப் பாடல்

"பெண்களுக்குள் ஆசீர பெற்றவர்" என்றும்
"பேறுபெற்றவர், ஆண்டவரின் தாய்" என்றும்
பரிசுத்தாவியால் எலிசபேத்து எடுத்துரைத்ததே
பரிசுத்ததாய் பக்திக்கான புகழ்ச்சிப் பாடல்

"கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை" என்ற
கபிரியேல் வானதூதரின் வாக்கையேற்று
கன்னிமையைக் களங்காது காத்திட்டமையே
கடவுளின் திருத்தாய் பக்திக்கான தியானப் பாடல்

"நான் ஆண்டவரின் அடிமை; உம் சொற்படியே
நிகழட்டும்" எனத்தன்னையே அர்ப்பணித்து
கடவுளின் தாயாக கருவுற்றமையே
கன்னிமரி பக்திக்கான காணிக்கைப் பாடல்

"இது முதல் எல்லாத் தலைமுறையினரும்
என்னைப் பேறுபெற்றவர் என்பர்" என்ற
இறுதியான அவள் இதயத்தின் இறைவாக்கே
இறையன்னை பக்திக்கான நன்றிப் பாடல்

"இதோ உம் தாய்" என்ற இயேசுவின் குரலை
இதயத்திலேற்று, அவர் இறுதி விருப்புக்கேற்ப
இறைதாயை எம் தாயாக்க வேண்டுமென்பதே
இறைதாய் பக்திக்கான இறுதிப்பாடல்

ஆன்ம, உடல் நோய்களை அகற்றி
ஆறுதலாயும், அடைக்கலமாயும் இருந்து
அன்பு மகன் இயேசுவிடம் பரிந்துபேசி
அன்னை நீர் அருள்புரிந்திடுமென்பதே எம் திருப்பாடல்

**ஆக்கம்: ஜெயவதனி மரியதாஸ்**
**செல்வநாயகபுரம்**

# பாலையூற்று மாதா



பாலையூற்று அன்னையே
பாலை மரச் சோலைகளிலும்
பக்தர்களின் உள்ளங்களிலும்
பச்சிளம் குழந்தைகளையும்
கொள்ளை கொண்டு
காட்சியளித்த அன்னையே
கானகமான காட்டுக் குகையில்
பதி கொண்டிருக்கும் அன்னையே
தம் மகனிடம் எமக்காகவே
என்றும் பரிந்துரைப்பவரே
பல கோடி நன்றிகள் கூறி
விழா எடுக்கும் மாதமாம் வைகாசி
கொண்டைப் பூக்கள் பூத்துக் குலுங்க
மரங்கள் காற்றில் கீதம் இசைக்க
மனித உள்ளங்கள் பேருவகையால்
மகிழ்ச்சியில் களிகூர்ந்து மகிழுதம்மா..
தாயே நீர்செய்த புதுமையோ
உம் புன்னகையின்மாயமோ
உம் பரிந்துரையின் அதிசயமோ
என்னவென்று சொல்வதம்மா
உம்மை உற்றுப்பார்க்கையில்
உணர்வுகள் கண்ணீராக கொட்டுதம்மா
கரம் பிடித்து வழி நடத்தி
வாழ்க்கை தந்தீரம்மா
வளம் பெற வாழ்த்துக்கள் பல சொன்னீர்
வாழ்வில் வெற்றி பெற்றிட
வாழ்வினை வாழ்ந்து காட்டினீரம்மா

K. சுபாஷினி

**விவிலியத்தின் ஜோடி இணைப்பு**

| | |
|---|---|
| ஆதாம் | - ஏவாள் |
| ஆபிரகாம் | - சாராள் |
| ஈசாக் | - ரெபேக்கா |
| யாக்கோபு | - லேயா, ராகேல் |
| மோயீசன் | - சிப்போரா |
| தாவீது | - பத்சேபா |
| சக்கரியா | - எலிசபேத் |
| சூசை | - மரியா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மையை எங்கே காண்போம்?

அருட்பணி.N.C.அருள்வரதன்

● வாழ்வோடு இணையாத
வார்த்தைகள் வீணல்லவா
பொன்னாக மொழிகளை
பொழிகின்ற வாய்கள்
சொல்வது ஒன்றும்
செய்வது வேறொன்றுமானால்
உண்மையே இல்லையே பின்
உண்மையை எங்கே தேடுவது.

● நீதியை நேர்மைகளை
நிலை பெறச் செய்வதற்கு
எம்மால் ஆனதை
செய்வோம்
எனச் சொன்ன வாய்கள்
சொன்னதை நினையாமல்
ஏதேதோ செய்யும் போது
உண்மையை எங்கே தேடுவது

● துன்புறுவோர் வேதனைகள்
துயர் நிலைகள் இனங்கண்டு
அன்பை அடித்தளமாய்
அமைத்து
மக்களின் வாழ்வினையே
உயர்த்தும் வார்த்தைகள்
வெறுமனே
வார்த்தைகளாய் நின்றுவிட்டால்
உண்மயை எங்கே தேடுவது.

● பேதங்கள் அற்ற
வாழ்வே வேண்டும்
ஏற்றம் இறக்கம்
உயர்வு தாழ்வு
செல்வந்தர் ஏழைகள்
கல்லாதோர் கல்விமான்கள்
என்னும்
வர்க்க வேறுபாடுகள்
வாழ்வுக்குத் தேவையே இல்லை
எனச் சொன்ன மறுகணமே
சொன்னவர் சொன்னதையே
மறந்து போனால்
உண்மையை எங்கே தேடுவது.

● எனவே
திடமான முடிவு இதுவே
ஆமென்றால்
ஆமென்போம்
இல்லை என்றால்
இல்லை என்போம்.

● இதையே வேதமும் சொல்லியதே
சொன்னதை மறவாமல்
சோர்வின்றி உழைக்கும் போது
உண்மையது அழியாமல்
உறவாடும் வாழ்வோடு
உண்மை இதை
மறக்க வேண்டாம்.

## மனிதனாக வாழ வேண்டுமா?

என்னை நான் அன்பு செய்ய வேண்டும். உலகம் உன்னை வெறுக்கிறதா ஏற்றுக்கொள், துன்புறுத்துகிறதா நன்றி சொல், ஆனால் முடியுமளவு நன்மை செய்து அன்பு செய்து உலகில் பலதையும் கற்றுக் கொண்டு பார்ப்பதற்கு கடினமாயும், பழகுவதில் பாசமாயும் இருந்து உண்மைக்காகவும் நீதிக்காகவும் இறைவனைப் பற்றிக் கொண்டு, முகமூடிகளை கிழித்து உறவிலே உண்மையைத் தேடு.

அன்பு என்றால் கடவுள் என்போம் ஆனால் இன்றும் தேவையின் நிலையிலே அன்பு பரிமாறும் நிலை. இது ஏன்? என்னை நான் அறியவில்லை இறைவனை சுவைக்கவில்லை யூதாசைப் போன்று ஆசை, தற்பெருமை, போலிப்பேச்சு இதனை அணி கலன்களாக அணிந்து போலி வாழ்வை வாழ்கின்றதால் இவற்றை கழற்றி எறிய விருப்பமில்லை.. எறிந்தால் ஏமாற்றம் அடைந்திடுவேன் என்ற மனப்பயம் கோழைத் தனம். இந் நிலை இருக்கும் வரை மனிதனாக வாழ முடியாது.இன்று வசதிகளோடு நவீன உலகத்திலே மனிதன் இருந்தும் தனது இலக்கை சரியாக அறிந்து கொள்ள முடியாது போலித்தீயில் குளிர் காய்கின்றான்.

இவற்றிலிருந்து விடுபட தந்தையாம் இறைவனை பற்றிக் கொண்டு இயேசுவை பின்செல் மனமே உலகிற்காக வாழாதே, உனக்காக உண்மைக்காக உன்னை படைத்தவருக்காக வாழ்ந்து பார், நீ மனிதனாக வாழ்வதை உணர்வாய்.

நீ மனிதனாக வாழும் போது ஆணவம், கர்வம், ஆசை, தற்பெருமை உன்னை நெருங்காது

K.சுபா
திரு மறைக்கல்வி நடுநிலையம்

## யாருக்கு முதலிடம்

வழமையாக எந்த மனிதரும் ஒரு பிரயாணத்திற்கோ, அல்லது நிகழ்விற்கோ சென்றால் இருக்கையில் முதல் தரமான இருக்கையில் முதல் தரமான இருக்கையைத் தான் விரும்புவார்கள். எங்கு சென்றாலும் தனக்குத்தான் முதலிடம், கௌரவம் தரவேண்டும் என எதிர்பார்க்கிற உலகம்.

அன்புப் பணியாளர் சபைத் துணைத் தொண்டர்கள் ஒன்று கூடி நடைபெற்ற ஞான விழாவின் போது அப் பணியாளர் சபை தலைவர் அவர்கள் அன்னை தெரேசா அவர்களுக்கு நான்கு அடி உயரமான இயேசுவைத் தாங்கும் சிலுவை ஒன்றை அன்பளிப்பாக கொடுத்தர். அன்னை தெரேசாவும் சந்தோஷத்துடன் வெள்ளைத் துணியால் சுற்றப்பட்ட சிலுவையுடன் விமானத்தில் ஏறி சிலுவையையும் தனக்கு அருகில் வைக்கும்போது விமானப்பணியாளர்கள் அன்னையிடம் வந்து முதலாம் வகுப்பில் இடங்கள் உள்ளன அந்த இடத்தில் சிலுவையையும் கொண்டுசென்று அமருங்கள் என்று அன்புடன் கூறினர். அன்னையும் அவர் கூறியதை ஏற்று திருச்சிலுவையை தூக்கிச் சென்று அவ்விடமுள்ள முதலாம் தர இருக்கையில் சிலுவையினை வைத்து பக்குவமாக கட்டிவிட்டு தனது பழைய இருக்கையில் வந்து அமர்ந்துவிட்டார். அன்னைதெராசாவிற்கு அளவில்லா ஆனந்தம் ஏனெனில் விமானப்பயணத்தில் கூட இயேசுவிற்கு முதலிடம் கொடுக்கப்பட்டது என்று

இப்போது எங்கு பார்த்தாலும் தனக்கு முதலிடம் , கொரவம் அளிக்கப்பட வேண்டும் என வறட்டுக் கௌரவம் தாண்டவமாடுகிறது. , இயேசுவுக்கு கொடுத்த மதிப்பையே பெருமையாக கொண்ட அன்னை தெரேசாவின் அளப்பரிய சேவையில் ஒருதுளி கூட நாம் செயற்படுத்துகிறோமா?.....

ஆக்கம்:
திரு.S.அந்தோனிப்பிள்ளை

## இளைஞர்களே..

க. கியூரி



கிரேக்க நாடு ,
மாபெரும் மரதன் ஓட்டப்பந்தயம் அது.
ஒருவர் மூன்று வருடங்களாக
முதலாவதாக வந்து வெற்றி பெற்றார்.
இன்னொருவர் அதே மூன்று வருடங்களும்
இரண்டாவதாக வந்து தோல்வியுற்றார்.
அது நான்காம் ஆண்டுப் போட்டி.
இரண்டாவதாக வந்திருந்தவர்
இவ்வருடம் கடுமையான பயிற்சி எடுத்திருந்தார்.
அந்த நாள் வந்தது.
கட்டுக்கடங்காத கூட்ட நெரிசலுடன்
போட்டி ஆரம்பமானது.
கடுமையான போட்டி அது.



இப்போதும் அவர்...
இரண்டாவதாக ஓடிக்கொண்டிருந்தார்.
வெற்றிக் கோட்டைத் தொட
இன்னும் ஐம்பதே அடிகள் தான்!
அவருக்கு வந்ததே ஒரு வெறி
அசுர பலத்துடன் அவரைத் தாண்டி ஓடிய போது...
அது நடந்தது.
முதலாவதாக ஓடிய அவர்,
கால் இடறி கீழே விழுந்து விட்டார்.
தொடர்ந்து ஓடி வெற்றிக் கனியைத் தட்டிப்பறிக்கும்
அரிய வாய்ப்பு இன்னொருவருக்கு!

ஆனால் அவரோ...
ஓடுவதை நிறுத்தினார், விழுந்தவரை தூக்கினார்.
முதலுதவி செய்து ஆசுவாசப்படுத்தினார்.
மீண்டும் ஓடும் வரை காத்திருந்தார்.
அவர் எழுந்த ஓட ஆரம்பித்ததும்,
தானும் பின்னே ஓடலானார்.
'கீழே விழுந்ததால், இவர் தோற்றுவிடக் கூடாது' என
நினைத்து அவர் மெதுவாக ஓட...
'எனக்காக அவர் வெற்றிக் கனியை விட்டுவிடக் கூடாது' என
நினைத்த இவர் மெதுவாக ஓட ...
இறுதியில் இருவரும் ஒரே நேரத்தில் வெற்றிக் கோட்டைத்
தொட்டனர்.
இருவரும் முதல் பரிசு பெற்றனர்.
பரிசு வழங்கும் போது நடுவர் சொன்னார்,
'இந்த மரதன் போட்டியிலே
அவரும் வெற்றி பெறவில்லை,
இவரும் வெற்றி பெறவில்லை,
இங்க வெற்றி பெற்று நிற்பது...
மனித நேயமே!'

மனிதநேயம் என்ற சொல்லைக் கேட்கவே மனதுக்குள் சந்தோசமாக உள்ளது. காரணம் நம் குடும்பத்தில்,வீட்டில்,சமூகத்தில்,பங்கில் மனித நேயத்தை காண்பது குதிரைக்கொம்பாகிவிட்டது.

'நான்' என்ற அகங்கார மனமும், 'எனக்கு மட்டும்' என்ற சுயநல போக்கும் நம்மில் உள்ள மனித நேயத்தை அழித்துவிட்டது

எத்தனையோ மறையுரைகள் கேட்டிருப்போம், எத்தனையெத்தனை தகவல்களை வாசித்துள்ளோம், அறிந்துள்ளோம், கேட்டுள்ளோம்... ஆனாலும் எமக்குள் மாற்றம் என்பது மலையேறிக் கொண்டே உள்ளது. மனித நேயங்களுடன் வாழ்ந்த பலருடைய வாழ்க்கை நடமாடும் புனிதை என்று பெயர்பெற்ற அன்னை தெரேசாவிடம் காணப்பட்ட மனித நேயத்தை இன்று தேடினாலும் பெற முடியாது. இன்றும் போற்றப்படுகின்ற இவரின் வாழ்க்கையில் இருந்து எமக்கு கிடைக்க கூடிய முத்துக்கள் பற்பல. எல்லாவற்றையும் பெறுவதுடன் நின்றுவிடுகின்றோம். ஏனோ... அவைகளை எம் வாழ்க்கையில் கொண்டு செல்ல பின்வாங்குகின்றோம்.

எம்மால் இயலாத போது முடியாத போது எமக்குள் அதிகப்படியான தைரியம் தேவைப்படுவது இயற்கை, எனவே அத்தருணம் நமக்கெல்லாம் தாயாக விளங்கும் அன்னை மரியாவை நினைந்திடுவோம். அவள் பாதத்தண்டை அமர்ந்திடுவோம். எமது துன்பங்களில் பங்கெடுக்க காத்திருக்கும் அன்னை மரியாவை சிக்கென பற்றிடுவோம். எமக்குள் மனித மாண்பை உருவாக்கும்படி வேண்டுவோம். எம்மை மனித மாண்புக்குள் வளர்க்க பரிந்து பேசும்படி கேட்போம். மனித மாண்பின் மணிமுடி அன்னை மரியாள் என்பதை அவள் வாழ்க்கையில் இருந்தே நாம் உணரலாம்.

அன்னையின் 'விண்ணேற்புப் பெருநாளாகிய' இந்த மாதத்தில் அன்னையிடம் எம்மை முழுவதுமாக ஒப்படைப்போம்.

'அம்மா என்று அழைத்தால்......'
குழந்தாய் என்று வரும் நம் அன்னையிடம் எம்மைக் கையளித்து, அன்னையின் பரிந்துரைக்காக காத்திருப்போம்.

மனித மாண்பும் குடும்பமுமாகிய இந்த வருடத்தில் அன்னை வாழ்ந்த திருக்குடும்பப் பண்புகளை எமது குடும்பங்களிலும் உருவாக்க முன் வருவோம்...........

## குட்டிக் கதை ஒன்று......

ஒரு வீட்டிலே கழுதை ஒன்றும் நாய் ஒன்றும் வீட்டு விலங்குகளாக வளர்கின்றன. ஒருநாள் இன்னுமொரு நாய் வீட்டு வளவிற்குள் நுழைந்து விட்டது வீட்டு நாய் ஒன்றுமே பேசாமல் கண்களை மூடிக்கொண்டு படுத்திருக்கிறது.

கழுதை திடீரென்று கத்தி ஆரவாரித்து நாயைக் கலைக்க முட்பட்ட போது நாய் ஓடி விட்டது. இதொன்றும் வீட்டுக் காரருக்குத் தெரியாது.

வீட்டுக்கார அம்மா கத்திக் கொண்டிருந்த கழுதைக்கு கம்பை எடுத்து போட்டார் நன்றாக அடி. அப்போது கண்களை மூடிபடுத்திருந்த நாய் கண்களைத் திறந்து, கழுதையைப் பார்த்தது அதன் பார்வையின் "கழுதையின்ர வேலையை கழுதை பார்க்க வேணும், நாயின்ர வேலையை நாய் பார்க்க வேணும்" என்பதை சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தது....... உண்மைதானே.

Fr. NC

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "தித்திக்கும் திருப்பாக்கள்"

அருட்பணி ரி.கிங்ஸ்லி றொபட்

செப்புத்தகம் என்ற நிலையிலே ஏறத்தாழ ஈராயிரத்து ஐனூறு ஆண்டுகளாக விவிலியத்தில் ஒரு சிறப்பிடத்தைச் **"சங்கீதங்கள்"** என்று அழைக்கப்படும் திருப்பாடல்களின் தொகுப்பு பெற்றுள்ளது. அன்று போல் இன்றும், வாழ்க்கையின் அனைத்துச் சூழ்நிலைகளிலும் இத்திருப்பாக்கள் அவற்றைப் பற்றுறுதியுடன் பயன்படுத்துவோருக்கு உறுதுணையாய் அமைந்திருக்கின்றன என்பதற்குச் சான்றுகள் தேடி அலைய வேண்டியதில்லை. வெவ்வேறு காலத்திலும் சூழலிலும் வாழ்ந்த வேறுபட்ட மனிதர்களின் மாறுபட்ட அனுபவங்கள் திருப்பாடல்களில் எழுத்துரு பெற்றுள்ளதால், அவை எக்காலத்திற்கும் எச்சூழலுக்கும் எப்போதும் எல்லார்க்கும் பயன்படக்கூடியன. இத்திருப்பாடல்கள் நம் ஒவ்வொருவருடைய சொந்த வரலாறு என்று சொன்னால் அது மிகையாகாது. **"திருப்பாக்களில் உன்னைக் காண்பாய்; உன்னைப் படைத்த கடவுளைக் காண்பாய்; படைப்பனைத்தையும் காண்பாய்"** என்ற மார்ட்டின் லூத்தரின் சொற்கள் எவ்வளவு உண்மை வாய்ந்தன! எனவே திருப்பாடல்களை நாம் வாசித்து,

**"இது என்னுடைய வாழ்வை எவ்வாறு தொடுகிறது? எனக்கும் இத்திருப்பாடல் கருத்திற்கும் ஏதாவது தொடர்பு உண்டா? இதுவே என்னுடைய பாடலாக இருந்தால் எவ்வாறு இது அமையும்? என்னுடைய அன்றாட வாழ்வுக்கு இத்திருப்பாடல் எனக்கு அளிக்கும் பாடம் என்ன?"** என்பது போன்ற வினாக்களை எழுப்பி எமது அன்றாட செபத்தில் விடைகாண முயற்சிப்பது பயனுள்ளதாகும். இதனையே குறிக்கோளாகக் கொண்டு தேவ ஏவுதலின் மணங்கமழும் தென்றல் காற்றான, உயர்ந்த வழிபாட்டின் ஊற்றான, வரம் தரும் வரிகளான திருப்பாடல்களைப் படிக்க, தியானிக்க, அவற்றின் துணைகொண்டு செபிக்க ஊக்குவிப்பதற்காக **"தித்திக்கும் திருப்பாக்கள்"** என்ற இத்தொடர் வெளிவருகிறது.

### திருப்பாடல் 01
### இருவழிகள்

**நல்வழியைப் பின்பற்றுவோர் (நல்லோர்)**

1நற்பேறு பெற்றவர் யார்? அவர் பொல்லாரின் சொல்லின்படி நடவாதவர்;
பாவிகளின் தீயவழி நில்லாதவர்; இகழ்வாரின் குழுவில் அமராதவர்;
2ஆனால், அவர் ஆண்டவரின் திருச்சட்டத்தில் மகிழ்ச்சியுறுபவர்; அவரது
சட்டத்தைப் பற்றி இரவும் பகலும் சிந்திப்பவர்; 3அவர் நீரோடையோரம்
நடப்பட்ட மரம் போல் இருப்பார்; பருவகாலத்தில் கனிதந்து, என்றும்
பசுமையாய் இருக்கும் அம்மரத்திற்கு ஒப்பாவார்; தாம்
செய்வதனைத்திலும் வெற்றி பெறுவார்.

**தீய வழியைப் பின்பற்றுவோர் (பொல்லார்)**

4ஆனால், பொல்லார் அப்படி இல்லை; அவர்கள் காற்று அடித்துச்
செல்லும் பதரைப் போல் ஆவர். 5பொல்லார் நீதித் தீர்ப்பின்போது
நிலைநிற்க மாட்டார்; பாவிகள் நேர்மையாளரின் மன்றத்தில் இடம்
பெறார்.

**இருவருக்கும் இறைவன் அளிக்கும் தீர்ப்பு**

6நேர்மையாளரின் நெறியை ஆண்டவர் கருத்தில் கொள்வார்;
பொல்லாரின் வழியோ அழிவைத் தரும்.

**பொருள் விளங்க...**

"நற்பேறு பெற்றவர்"(1:1) என்ற மங்கலச் சொல்லோடு மனிதரை வாழ்த்தித் தொடங்கும் திருப்பாக்களின் தொகுப்பு, "ஆண்டவரைப் புகழ்ந்திடுக" (150:6) என்னும் இறுதி இறைவாழ்த்து அழைப்போடு முடிவடைகிறதைப் பார்க்கமுடியும்.

இத்திருப்பா "நல்லது செய்யின் நல்லது விழையும்; அல்லது செய்யின் அல்லதே விழையும்", "தினை விதைத்தவர் தினை அறுப்பார், வினை விதைத்தவர் வினை அறுப்பார்" என்ற மரபுகளைப் பின்பற்றி நல்லோரையும் தீயோரையும் நெறிப்படுத்துகிறது எனலாம். இயேசு கூறிய இடுக்கமான வாயில் -அகன்ற வாயில் **(மத் 7:13-14)**, பாறைமேல் வீடு கட்டிய அறிவாளி - மணல்மீது வீடு கட்டிய அறிவிலி **(மத் 12:24-27)**, நற்கனிதரும் மரம் - தீய கனி தரும் மரம் **(மத். 12:33-34)** என்பனவும் இம்மரபையே வலியுறுத்துகின்றன.

**செபித்து வாழ...**

நம் ஒவ்வொருவர் முன்னும் இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று நன்மைக்கும் வாழ்வுக்கும் இட்டுச் செல்வது; ஏனையது தீமைக்கும் சாவுக்கும் இழுத்துச் செல்வது **(இச 30:15-20)**. ஒன்று வளரும் ஒளியைப் போன்றது; மற்றது அழிக்கும் இருள் போன்றது **(நீமொ 4:18-19)**; முதல் வழி ஒடுங்கியது; அதை நாடிச் செல்வோர் சிலரே. இரண்டாம் வழி பரந்தது; அது பலரை வலிய ஈர்ப்பது **(மத் 7:13-14)**. நாம் செல்வது எவ்வழி?

கிறிஸ்து நமக்குக் காட்டும் வழி வாழ்வளிக்கும் முதல் வழி. அவர் வழிகாட்டி மட்டுமன்று, அவரே அவ்வழியும் ஆவார். அவர் வழி நடப்போமாயின் நாம் பேறு பெற்றவர்கள் ஆவோம்.

**"நேர்மையாளரின் நெறியை ஆண்டவர் கருத்தில் கொள்வார்"**



## யாழ் அமலமரித்தியாகிகளின் புதிய மாகாண முதல்வராக
## அருட்பணி எஸ். எட்வின் வசந்தராஜா அ.ம.தி

கடந்த காலங்களில் யாழ் மாகாண முதல்வராகப் பணியாற்றிய அருட்பணி போல் நட்சத்திரம் அவர்களின் பணிக்காலம் நிறைவு பெறவே புதிய முதல்வராக அருட்பணி எஸ். எட்வின் வசந்தராஜா அ.ம.தி அவர்கள் யாழ் அமதிகளின் புதிய மாகாண முதல்வராக நியமனம் பெற்றுள்ளார். இந்த நியமனத்தை அமதிகளின் சிரேஷ்ட முதல்வர் அருட்பணி லூயிஸ் லவுகன் அ.ம.தி அவர்கள் நியமித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவருக்காக செபிப்போம் வாழ்த்துவோம்

# குடும்பக் குவலயம்

# பிள்ளை ஆன்மீகம்



மேர்ஸிக்கு நான்கு வயது சுறுசுறுப்பின் மொத்த இருப்பிடமே அவளிடம் தான். துடிதுடிப்பான அந்த சிறுமி மறைக்கல்வி வகுப்புக்குபோக ஆசைப்பட்டாள். அம்மா வேணிக்கு மகள் நாட்டியம் பழகவேணும் அதுவும் ஞாயிறுமட்டும் தான் நாட்டியப்பள்ளி எனவே தடைபோட்டாள்.

ஆண்டவா! பதினைந்து வயதுப்பிள்ளை என் மகன் இப்படி அடாவடித்தனம் செய்கிறானே, எல்லா கெட்டக்குணமும் எப்படி? இவனிடம் குடிவந்தது என்று தெரியவில்லையே! உறவுக்காரர் முன்னும் ஊரார் பின்னும் வசைபாடுறாங்களே!

**என்னசெய்வேன். மேலே சொல்லப்பட்ட சம்பவங்கள் பற்றி என்ன நினைக்கிறீங்கள்? ஒருநிமிடம் மட்டும் யோசியுங்க!**

## பிள்ளைகளின் ஆன்மீகம் என்றால் என்ன?

எல்லாப் பிள்ளைகளைப் போலவேஎன் பிள்ளையும் வளரவேண்டும் நாட்டியம்,இசை என பல்த்துறையிலும் முன் நிற்கவேண்டும்.. இது எல்லாப் பெற்றோரினது அவா!

ஆனால் பிள்ளையோ! T.V.பார்க்கவேண்டும், இசையை ரசிக்க வேண்டும், பெஷனா உடைஅணிய வேண்டும், சினிமா பாணியிலே மாறணும், என்று ஆசைப்படும் வேளையிலே, பிள்ளை அறிவில் மட்டுமல்ல, ஞானத்திலும் ஒழுக்கத்திலும் வளரத் தேவையான விதையை விளைவிக்கும் விளைநிலமே இந்த ஆன்மீகம். இந்த ஆன்மீகத்தை நல்ல ஆரோக்கியமான குடும்ப சூழலிலும், சமூகம் முன் வைக்கும் மறைஅறிவும் மிக அவசியம்.

## பிள்ளை ஆன்மீகத்தில் வளர்ந்தால்...

- பிள்ளை சிந்திக்கும்.
- சிந்திப்பதில் சரியானதை செயற்படுத்தும்
- செயற்படுத்தியதில் பெற்ற அனுபவத்தைபேணும்.
- நன்மையையும், தீமையையும் பிரித்து இனங்காணும்.
- இறை குரலை இனங்கண்டு செம்மையாகவாழும்.
- குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் ஏற்றபிள்ளையாக இருக்கும்.

## பிள்ளை ஆன்மீகத்தில் வளர நாம் என்ன செய்ய வேண்டும்?



1. குழந்தையின் செயற்பாட்டை அவதானித்தல்.
2. அதன் ஒவ்வொருஅசைவையும் செவிமடுத்தல்.
3. குடும்பமாகசெபித்தல்
4. வழிபாடுகளில் குடும்பமாக கலந்துகொள்ளல்
5. ஞாயிறு மறைக்கல்வி வகுப்புக்கு அனுப்பிவைத்தல்
6. இறை அனுபவங்கள் பற்றிபிள்ளைகள் விளங்கும் வகையில் உரையாடுதல்.
7. ஞாயிறு இறைக்கல்வி வகுப்புகள், பிள்ளைகள் ஈர்க்கும் வகையில் ஒழுங்குபடுத்துதல்.
8. ஞாயிறு வழிபாடுகள் சிறுவர்களைகவரும் வகையில் அமைத்துக் கொள்ளல்.

எதிர்காலத்தில் பிள்ளைகளின் வாழ்வு மலரவேண்டுமெனின் பிள்ளைகளின் ஆன்மீகம்வளர்ச்சிபெறவேண்டும். அதற்கு குடும்பங்களாகவும், திருச்சபை சமூகமாகவும் சிந்தித்து செயலாற்றுவது காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

திருமதி ரீட்டாபெர்னாண்டோ
பாலையூற்று.
மறைமாவட்ட குடும்ப வாழ்வுபணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதாகமம் பிறந்த கதை

*அருட்பணி. போல் றொபின்சன்*

**வாசியுங்கள் யோசியுங்கள் விசுவசியுங்கள் என்று எமது முதல் பகுதியில் முடித்திருந்தோம்!**

**"வேதாகமம் பிறந்த கதை"** எழுதுவதன் நோக்கம், நம்மில் பலருக்கு குழப்பங்கள் நீங்கி தெளிவு தேவை என்பதற்காகவும் நமது விசுவாச பயணத்திற்கு அத்திவாரமாக அமைந்துள்ள பரிசுத்த வேதாகமத்தை ஆழமாக நாம் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவுமே!

**"சந்தேகம் பிறந்து விட்டால்**
**சத்தியமும் நிலைப்பதில்லை"** என்பார்கள்

இது குடும்ப உறவுமுறைகளுக்கு மட்டுமல்ல கிறீஸ்தவ விசுவாச வாழ்வுக்கும் பொருத்தமானதாகவே இருக்கின்றது. "வாழ்வும் வழியும் உண்மையும் நானே" என வாசிக்கின்றோம் இயேசுவே உண்மை (சத்தியம்) **(யோவான்14:7)** அந்த இயேசு எனும் உண்மையை/ சத்தியத்தை விளக்கிக் கூறும் வேதாகமத்தை ஆழமாக கற்றுக் கொள்ளாமல், அதன் முழுமையான அர்த்தம் புரியாமல் வரிகளுக்கு மாத்திரம் விளக்கம் கொடுக்க முற்படுவது ஆபத்தானது! ஏன் ஆபத்தானது!

**அது பலரை திசை திருப்பும்! வீண் சந்தேகங்களை உண்டு பண்ணும் - ஏன் சத்தியத்தையே மாற்றியமைக்கப் பார்க்கும்! விசுவாசம் கேள்விக்குறியாகிவிடும்!**

எனவே தான் **"வேதாகமம் பிறந்தகதை"** மூலமாக கொஞ்சமாவது நாம் தெளிவடையலாம்! வேதாகமத்தை கற்றுக் கொள்ளலாம், தெரிந்து கொள்ளலாம்! விசுவாசத்தில் உறுதி பெறலாம் எனும் நம்பிக்கை எனக்குண்டு.

இப்போது நாம் கதைக்கு வருவோம்!!!

முறையான அச்சுக்கூடங்களில் (Printing press) தோன்றியது 15th நூற்றாண்டுகளில் தான். அதன் பின்பு 18th 19th நூற்றாண்டுகளில் தான் ஓ.்பிசெட் அச்சுமுறை (Off set printing) ஸ்கிறீன் அச்சு முறை (Screen printing) டிஜிடல் அச்சு முறை (Digital printing) என்றெல்லாம் இன்றும் வெகுவாக வளர்ச்சியடைந்துள்ளது.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், இப்போது நமது கையில் அழகாக, தெளிவாக அச்சடிக்கப்பட்ட பரிசுத்த வேதாகமங்கள் தவழ்கின்றன. இவை இந்த 6 நூற்றாண்டுகளுக்குள் (15th நூற்றாண்டு தொடங்கி 21 நூற்றாண்டுவரை) நமக்கு கிடைத்த பெரிதானதோர் ஆசீர்வாதம் என்றே கூறவேண்டும். ஆயினும் 15நூற்றாண்டு வரையிலும் பாவிக்கப்பட்ட வேதாகமங்கள் எல்லாமே,கையெழுத்துப் பிரதியாகவே இருந்தன. (Manu scripts அல்லது Auto graph) அச்சுக்கூடங்கள் தோன்றும் காலம் வரைக்கும் திருச்சபை தனிப்பட்ட வேதாகம பிரதிகளை எழுதுவதற்கு மறைநூல் அறிஞர்களையும் (Scribes) வல்லுனர்களையும் பணித்திருந்தது. இந்த மறைநூல் அறிஞ்கள் மிகவும் நிதானத்தோடும், தெளிந்த ஞானத்தோடும், நிச்சயமாக இறைவனின் ஆவியின் வழிநடத்துதலிலும் இப்பிரதிகளைப் படைத்தார்கள். ஒன்றைமட்டும் புரிந்து கொள்ளுங்கள் நமது கையில் தவழும் வேதாகமம், "இறைவார்த்தை மனித வார்த்தைகளில்" (Word of God inhuman language) இவ்வண்ணமாக ஒரு பிரதியைப் பார்த்து மற்றொரு பிரதி மற்றொரு பிரதியைப் பார்த்து இன்னுமொரு பிரதியாக எழுதிக்கொண்டே போனார்கள்.

ஒருவிதத்தில் நமது கல்வி முறைகளில் இருக்கும் "பார்த்து எழுதுதல்" அல்லது "சொல்வதெழுதுதல்" போன்ற முறைககள்தான் கையாளப்பட்டன.

பிரதான கையேட்டுப் பிரதியிலிருந்து ஒரு மறைநூல் அறிஞர் வாசிக்க வாசிக்க ஏனைய மறைநூல் அறிஞர்கள் அதை எழுதும் முறையைக் கையாண்டார்கள். அல்லது ஒரு கையேட்டுப் பிரதியை (Copy of the manu scripts) பார்த்துப் பார்த்து ஏனைய மறைநூல் அறிஞர்கள் மீள் பிரதிசெய்யும் முறையை கையாண்டார்கள்.

தொடரும்........

# திருகோணமலை மறைமானிலச் செய்திகள்

## தூயமரியாள் பேராலயத்தில் திருஉடல் திருஇரத்தப் பெருவிழா

ஜீன் மாதம் 29ம் திகதி காலை சிறுவர்களுக்கு முதல்நற்கருணை கொடுக்கப்பட்டது. பிற்பகல் 5.00 மணிக்கு தூய அந்தோனியார் ஆலயத்தில் சிங்கள மொழியில் அருட்பணி லக்ஷ்மன் பீரிஸ் இ.ச அவர்களால் வழிபாடு ஆரம்பிக்கப்பட்டு பின்பு நற்கருணைநாதர் பவனி தி/சென்ற் மேரிஸ் கல்லூரிக்கு சென்று அங்கு ஆங்கிலத்தில் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி ரி.கிங்ஸ்லிறொபட் அவர்களால் வழிபாடு நடைபெற்று பின் தூயமரியாள் பேராலயத்தை சென்றடைந்தது. அங்கு தமிழில் அருட்பணி எல். பிலிப் அவர்களால் வழிபாடு நடைபெற்று ஆயரின் பிரதி நிதி அருட்பணி C. நோயல் இம்மானுவேல் அவர்களின் இறுதி ஆசீரினால் நற்கருணை பவனி முடிவடைந்தது. சகல பங்கிலுமுள்ள இறைமக்களும் ஏனைய அருட்பணியாளர்களும் கலந்து கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## சலப்பையாறு தூய சிந்தாத்திரை மாதா திருவிழா

கடந்த ஜீலை மாதம் 16,17,18,19 திகதிகளில் அருட்பணியாளர்களான S.S.ஜோன்பிள்ளை, ஜ. யூட்சர்வானந்தா, ஜே.சுதர்சன், யூட் ஜோன்சன் ஆகியோரினால் நவநாட்கள் சிறப்பிக்கப்பட்டன. 20ம் திகதி ஞாயிற்றுக் கிழமை திருவிழாத் திருப்பலி ஆயரின் பிரதிநிதி அருட்பணி நோயல் இம்மானுவேல் அவர்களின் தலைமையில் அருட்பணியாளர்களான S.S. ஜோன்பிள்ளை, பங்குத்தந்தை S.ஜெயரெட்ணம் அவர்களினால் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருவிழா திருப்பலியில் ஆயரின் பிரதிநிதி மனித பயணங்களும், யாத்திரைகளும் எமது குடும்பங்களில் செயல்படுவதால் அவை ஒற்றுமையை ஏற்படுத்தும் என்றும் கூறினார்.

## சாம்பல் தீவு தூய அந்தோனியார் சிற்றாலயத் திறப்புவிழா

சாம்பல் தீவு தூய திருமுழுக்கு யோவான் ஆலயப்பங்கு மக்களால் ஆத்தி நகரின் சூழலில் தூய அந்தோனியாருக்கு சிற்றாலயம் அமைக்கப்பட்டு 2014 ஆனி மாதம் 22ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 மணியளவில் கோலாகலமாக திறந்த வைக்கப்பட்டது. இவ் விழாவிற்கு பங்கு மக்கள் அனைவரும் ஒன்று கூடி எம் மறைமாவட்டத்தின் அதி.வண.ஆயர் கலாநிதி யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களாலும், குருமுதல்வர் அருட்பணி.ரி.கிங்ஸ்லிறொபட், அமல மரித் தியாகிகள்சபை முதல்வர் லூயிஸ் லவுகன், ஆயரின் பிரதிநிதி அருட்பணி நோயல் இம்மானுவேல் உட்பட அருட்பணியாளர்கள் மற்றும் அருட்சகோர சகோதரிகள், முக்கிய பிரமுகர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் சிறுவர்கள் மலர்தூவ தமிழ்ப் பண்பாட்டின் மையமான நாதஸ்வர இசையுடன் வரவேற்கப்பட்டனர். பின் ஆயர் அவர்களால் ஆலயம் அபிசேகம் செய்யப்பட்டு திருப்பலியும் நிறைவேற்றப்பட்டது. இற்றைக்கு 10 வருடங்களுக்கு முன் (2004.06.13) அந்தோனியார் சதுக்கமாக உருவாக்கப்பட்டது. இப் புனிதரின் பரிந்தரையால் பலரும் நன்மை பெற்றமையுடன், புனிதருக்கு வருடா வருடம் திருநாளும் கொண்டாடப்பட்டு வருகின்றது அதன் பின்னர் அருட்பணி T.எட்வின் அ.ம.தி அவர்கள் பங்கை பொறுப்போற்றபின் பங்கு மக்களின் அயரா முயற்சியோடும் அந்தோனியார் சதுக்கம் ஓர் சிற்றாலயமாக மிளிர்ந்து நிற்கின்றது.

## மறைமாவட்டவிவிலிய பேச்சு போட்டி முடிவுகள் - 2014

### தமிழ்ப் பிரிவு

**தரம் 4,5,6**

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | செல்வி செந்தில் நாதன். ஆன்மியூரிகா | மூதூரப் பங்கு |
| 2ம் இடம் | செல்வன் நோயல் டானியல். டிகாஷன் | உவர்மலைப் பங்கு |
| 3ம் இடம் | செல்வி சி.ஹம்சாளினி | இருதயப்புரப் பங்கு |



**தரம் 7,8,9**

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | செல்வி அ.ஆன்பவுஸ்ரினா | பேராலயப் பங்கு |
| 2ம் இடம் | செல்வி நேசராஜா. லக்ஷிக்கா. ஹொனாஸ்டி | குவாடலூப்பே (பள்ளத்தோட்டம்) |
| 3ம் இடம் | செல்வி எட்மன்.கோ.வினாசியோனி | நிலாவெளிப் பங்கு |

**தரம் 10,11,12**

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | செல்வன் செல்வகுமார் பிரின்ஸ் பவித்திரன் | பாலையூற்றுப் பங்கு |
| 2ம் இடம் | செல்வன் நோயல் ஆகாஸ்.அருட்கிருபாகரன் | குவாடலூப்பே பங்கு |
| 3ம் இடம் | செல்வி மத்தியூஸ் கொரேரா.ஜெனிபர் | மூதூரப் பங்கு |

### சிங்களப் பிரிவு

**தரம் 5,6,7**

1ம் இடம் செல்வி எம்.கவிஷா ஜிம்ஹானி குவாடலூப்பே பங்கு



**தரம் 8,9,10**

1ம் இடம் செல்வி பி.எச் மல்ஷி காவியா குவாடலூப்பே பங்கு

## மறைமாவட்ட விவிலிய அறிவுப் போட்டி சிங்களப் பிரிவு

**தரம் 5,6,7**

1ம் இடம் ஆண்டாங்குளம் பங்கு பெறுகிறார்கள்.

**தரம் 8,9,10**

1ம் இடம் ஆண்டாங்குளம் பங்கு பெறுகிறார்கள்.

**வாசகர்களே!**

**உங்கள் ஆக்கங்கள், கவிதைகள், கட்டுரைகள், பங்கின் செய்திகளையும் எதிர்பார்க்கின்றோம். அவற்றை திருமலைத் தீபத்திற்கு அனுப்பி வைக்கவும்.**

**குறிப்பு: பங்கு சார்ந்த செய்திகளை பங்குத்தந்தையின் அனுமதியுடன் அனுப்பி வையுங்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**ஆசிரியர்**
**திருமலைத் தீபம்**
**297, டொக்கியாட் வீதி,**
**திருகோணமலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதிக்கப்பட்ட அடித்தள.....

திருகோணமலை எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் அங்கு கடமை புரியும் உத்தியோகத்தரகள் மற்றும் Y.M.C.A அங்கத்தவர்கள், S.D.R.O தொண்டர் ஸ்தாபன உத்தியோகத்தர்கள் மேலும் கிராம தொண்டர்களை உள்ளடக்கிய ஒரு குழுவிற்கு கிராமம் ஒன்றைக் கட்டியெழுப்புதல் தொடர்பான பயிற்சிப் பாசறையானது அலஸ்தோட்டப் பகுதியில் அமைந்துள்ள எகெட் நிறுவன"தீபம்" கேட்போர் கூடத்தில் ஜீலை 7ஆம், 8ஆம், 9ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இப்பயிற்சி பாசறைக்கு திரு.வசந்தராஜா (மட்டக்களப்பு மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத் தலைவர்) அவர்களும் அவருக்கு உதவியாக திரு.ரமேஸ் அவர்களும் ஒரே வளவாளர்களாகக் கலந்து நிகழ்வைச் சிறப்பித்தனர். 2014.07.07ம் திகதிகாலை 8.30 மணிக்கு ஆரம்பமான நிகழ்விற்கு எகெட் பணிப்பாளர் அருட்பணி க.நிதிதாசன் அவர்கள் தலைமை வகித்து, அருட்பணி போல் றொபின்சன் அவர்கள் விசேட அதிதிகளாக கலந்து கொண்டு பயிற்சியை ஆரம்பித்து வைத்தார்கள்.

இப் பயிற்சிப் பாசறையின் போது பாதிக்கப்பட்ட கிராமங்கள் தோறும் உள்ள அடித்தள மக்களது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் அநேக விடயங்கள் பற்றி தெளிவான விளக்கமளித்ததோடு, செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது மக்களுக்கும் செயற்திட்டத்திற்குமான தொடர்பு, மக்களது பங்களிப்பு மற்றும் மக்களுடன் எவ்வாறு அணுகுவது, என்பது பற்றி இலகுவான முறையில் செயற்பாடுகள் மூலம் பல ஆலோசனைகளை வழங்கிய வளவாளர் திரு.வசந்தராஜா அவர்களது விளக்கங்கள் பாராட்டுதற்குரியதாகும்.

எகெட் கரித்தாஸ்
திருகோணமலை.

# மரியாள் என்னும் அருளோவியம்

அருட்பணி. ஆஞ்சலோ பொன்னையா இ.ச



**"கடவுள் நாம் காண்கின்ற இவ்வுலகைவிட பன்மடங்கு மேலான உலகைப் படைத்திருக்க முடியும். மேலான மோட்சத்தையும் உருவாக்கியிருக்க முடியும். ஆனால் தேவதாயைவிட மேலான ஒரு தாயைப் படைப்பது அவரால் கூடாது" புனித பொனவந்தூர்.**


**படைப்புக்களின் மகுடம் மரியாள் :** இறைவனின் அனைத்துப் படைப்புக்களிலும் மேலான படைப்பு அன்னை மரியாள். மனுக் குலத்தை மீட்கும் இறைவனின் திட்டத்தில் இயேசுவை இவ்வுலகத்திற்குப் பெற்றுக் கொடுத்ததன் வழியாக மரியாளுக்கு முக்கிய பங்கு உள்ளது என்பதே மரியாளின் மேன்மைமிக்க நல்லதொரு சான்றாகும் "கடவுள் படைக்கப்பட்ட அனைத்தின் தந்தையாவார், மரியாள் புதுப்பிக்கப்பட்ட அனைத்தின் தாயாவார். அனைத்தும் உண்டாகக் காரணமாயிருந்தவரை ஈன்றெடுத்தார். மீட்கப்பட்ட அனைத்திற்கும் காரணமாயிருந்தவரை மரியாள் ஈன்றெடுத்தார்." என்று மிக அழகாக கூறுகிறார் புனித அன்சலம்.

புனித அகுஸ்தினார் மரியாளைப் பார்த்து "உம்மை உண்டாக்கியவர் உம்மிடத்திலே உண்டாக்கப்பட்டவர்" என்று கூறுகிறார். இத்தகைய மகிழ்ச்சிக்கும், புகழ்ச்சிக்கும், வணக்கத்திற்கும் உரியவள் தான் நம் அன்னை, திருச்சபையின் தாய். இவ்வாறான ஒரு நிலைக்கு அவள் உயர்த்தப்படுவதற்கு அவளிடம் இருந்த முக்கிய பண்புகள்: **கீழ்ப்படிதல், விசுவாசம், தாய்க்குரிய நம்பிக்கை, தாய் அன்பு.**

**கீழ்ப்படிதல் :** மரியாளிடம் பொதிந்து கிடந்த முக்கிய பண்புகளில் ஒன்று கீழ்ப்படிதல். இறைவனின் திருவுளத்திற்கு அடிபணிந்து, தன்னையே சரணாகதியாக்கினாள்.கடவுள் அவளுக்கு ஓர் அழைப்பை விடுக்கிறார். விடுகதை போன்று அது தோன்றினாலும் தன்னையே அடிமையாக்கி தன் மனநிலையை இறைவனின் மனநிலைக்கு அடிமையாக்கி "ஆம்" என்கிறாள் "இதோ ஆண்டவரின் அடிமை, உமத வார்த்தையின் படியே ஆகட்டும்" **(லூக் 1:38)** எனக் கூறி தனது சம்மதத்தையும் தெரிவிக்கிறாள்.

**விசுவாசம் :** மரியாளின் ஆளுமையில் விசுவாசம் அசைக்க முடியாதொன்றாக இருந்தது. இறைவன் மீது அவள் வைத்திருந்த பற்று விசுவாசத்திற்கு வித்திட்டது. "ஆண்டவர் சொன்ன வாக்கு நிறைவேறும் என்று விசுவசித்த நீர் பேறுபெற்றவர்" என்ற எலிசபேத்து மரியாளை வாழ்த்துகிறாள். இந்த விசுவாசத்தின் அடிப்படையில் எழுகின்றது. ஏன் வெடிக்கின்றது மரியாளின் புரட்சிக்கீதம் உன்னதமான புகழ்ச்சிக் கீதம்.

**"என் ஆன்மா ஆண்டவரை ஏற்றிப் போற்றுகின்றது, என் மீட்பராம் கடவுளை நினைத்து என் இதயம் பேருவகை கொள்கிறது" ஏனெனில் தாழ் நிலை நின்ற தம் அடிமையைக் கடைக்கண் நோக்கினார். இதோ! இந்நாள் முதல் எல்லாத் தலைமுறைகளும் என்னைப் பேறுடையாள் எனப் போற்றுமே.... (லூக்1:45-55)**



**தாய்மைக்குரிய நம்பிக்கை :** மரியாள் தாய்மைக்குரிய பரிவையும் பாசத்தையும் அடிப்படையாக வைக்க அவரிடம் இருந்தது நம்பிக்கை கானாவூர்த் திருமணத்தில் பற்றாக்குறை வந்த போது அவள் பதறிப் போனாள். திருமணத்திற்கு வந்தவர்கள் யாருமே இதைக் கவனிக்கவில்லை இப்படிக் கவனித்திருந்தாலும் அதைப்பற்றி அக்கறை கொள்ளவில்லை. ஆனால் நம் அன்னை இடுக்கண் வந்தவுடனே அதனைக் கூர்ந்து கவனித்து, விசாரித்து அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கிறாள். ஓடோடிச் சென்று தன் மகனை அணுகுகிறாள். புதிய இரசம் பொங்கி வழிகிறது. மக்கள் உள்ளங்களில் மகிழ்ச்சி பொங்கக் காரணமாய் இருக்கிறாள்.

**"அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்"** என்று நம்பிக்கையுடன் கூறுகிறாள். புதுமை நடந்தேறுகிறது. இதன் வழியாக தனக்கு மகிமையை அவள் சேர்க்கவில்லை. ஆனால் தன் மகனுக்கு மகிமைத் தேடித் தருகிறாள்.

**தாயன்பு:** இறுதியாகத் தன்னலமற்ற தாயன்பை நமக்குக் காட்டுகிறார் நம் அன்னை. தனது ஒரே மகனை இழந்தாலும் அந்த மகனின் இறுதித் துன்பத்தில் அவள் முழுமையாக பங்கேற்கினறாள். சிலுவையடியில் தன் மகனை பலி கொடுத்த நெஞ்சுரத்தோடு அங்கே நிற்கின்றாள். துன்பத்தைத் தாங்கிக் கொண்டு தைரியத்தோடு சிலுவையடியில் நிற்கின்றாள். மேற்கூறிய பண்புகளுக்காக நம் அன்னை மரியாள் படைப்புகளுக்கெல்லாம் மேலான படைப்பு என்பது நமக்கு தெளிவாக விளங்குகிறது.



**மரியாளின் விண்ணேற்புப் பெருவிழா:** ஆவணித் திங்கள் என்றதும் நம் நினைவுக்கு வருவது மரியாளின் விண்ணேற்புப் பெருவிழா மரியாளின் விண்ணேற்புப் பற்றிய நம்பிக்கையின் அடிச்சுவடுகள் கி.பி. 4ம் நூற்றாண்டிலிருந்தே தென்படுகின்றன. அந்நூற்றாண்டின் இறுதியிலிருந்தே கீழைத் தேசத் திருச்சபையில் "மரியா இறப்பு நினைவுநாள்"திருநாளாகக் கொண்டாடப்பட்டது. மேற்கு ஐரோப்பாவில் 7ம் நூற்றாண்டிலிருந்து இத்திருநாள் மரியாளின் விண்ணகப் பிறப்புநாள் என்ற பெயரில் கொண்டாடப்பட்டது. 8ம் நூற்றாண்டில் ஆவணித் திங்கள் 15ம்நாள் "விண்ணேற்புப் பெருவிழா" என்ற பெயரில் கொண்டாடத் தொடங்கியது 13ம் நூற்றாண்டின் இறுதிக்குள் திருச்சபை முழுவதும் இவ்விழா பரவலாயிற்று.

முதல் வத்திக்கான் திருச்சங்கத்தில் பங்கேற்ற 200ஆயர்கள் இதனை விசுவாச சத்தியமாக பிரகடனப்படுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர். 1946ம் ஆண்டில் திருத்தந்தை 12ம் பத்திநாதர் உலக ஆயர்கள் அனைவர்க்கும் "இறைவனின் தாய் கன்னிமரியாள்" என்னும் மடல் ஒன்றை எழுதி அவர்கள் கருத்தைக் கேட்டார்.

**"எனது வணக்கத்திற்குரிய சகோதரர்களே, புனித கன்னிமரியாள் உடலோடு விண்ணேற்பு அடைந்ததை ஒரு விசுவாசக் கோட்பாடாக அறிக்கையிடலாம். என உமது ஞானத்திற்கும், விவேகத்திற்கும் ஏற்ப விரும்புகிறீரா?** அக்கேள்விக்கு 98 சதவீதத்திற்கு மேற்பட்ட ஆயர்கள் **"ஆம்"** என்று பதிலளித்து கோட்பாட்டிற்கான பின்னனியைத் தயார் செய்தார்கள். 11.11.1950 அன்று திருத்தந்தை 12ம் பத்திநாதர் மரியாளின் விண்ணேற்பை ஒரு விசுவாசக் கோட்பாடாக வரையறுத்து இறைவனின் மாசற்ற அன்னையும் என்றும் கன்னிகையுமான மரியாள் அவரது விண்ணக வாழ்வில் பயணம் முடிந்த போது உடலோடும் ஆன்மாவோடும் விண்ணக மகிமைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்.

இதை இறைவனால் வெளிப்படுத்தப்பட்ட விசுவாசக் கோட்பாடு என நம் ஆண்டவர் இயேசு கிறீஸ்து, புனித பேதுரு பவுல் ஆகியோரது அதிகாரத்தாலும் எமது அதிகாரத்தாலும் நாம் அறிக்கையிட்டு எடுத்துரைத்து வரையறுத்து கூறுகிறோம் என அறிவித்தார்.

ஆவணித் திங்கள் அவனியெங்கும் அன்னை மரியாளின் விண்ணேற்பு விழா கொண்டாடப்படும் வேளை மரியாளின் பெயர் கொண்ட எமது மறைமாவட்ட பேராலயத் திருவிழாவும் கொண்டாடப்படும் அன்னை மரியாளின் பரிந்துரையால் பேராலயத்திற்கும் மறை மாவட்டத்திற்கும் இறையாசீர் வேண்டி செபிப்போம்.

## அறிவித்தல்

**உங்கள் அன்புக்குரியவர்களின் பிறந்தநாள், திருமணநாள், இறந்தநாள் ஆகியவற்றை பிரசுரிக்க வேண்டியவர்கள் எந்த மாதத்தில் பிரசுரிக்க வேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் தெளிவாக எழுதி எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்**

### கட்டண விபரம்

| | |
|---|---|
| கறுப்பு வெள்ளை | 1/4 பக்கம் - 2500.00 |
| | 1/2 பக்கம் - 5000.00 |
| கலர் | 1/4பக்கம் - 3750.00 |
| | 1/2 பக்கம் - 7500.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வத்திக்கான் செய்திகள்




**திருத்தந்தை பிரான்சிஸ்:** ஜீலை 08. 2014 கடவுளோடு இருக்கையில் எதுவும் இழக்கப்படுவதில்லை, ஆனால் கடவுளின்றி வாழும்போது அனைத்தும் இழக்கப்படுகின்றன என, இச்செவ்வாயன்று தனது டுவிட்டர் செய்தியாக வெளியிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். மேலும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் ஜனவரி திருப் பயணத்திற்காகத் தயாரித்து வரும் பிலிப்பைன்ஸ் மக்கள் திருத்தந்தை போல் வாழ முயற்சிக்குமாறு அழைப்பு விடுத்துள்ளார். அந்நாட்டு ஆயர் பேரவைத் தலைவர் பேராயர் socrates villegas. "அவருடைய கருணையால் தேர்ந்தெடுக்கப்பட்டு "(Miseratendo atque eligendo) என்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் விருதுவாக்கைப் பின்பற்றி பிலிப்பைன்ஸ் நாட்டவர் கருணையை, தேசிய அடையாளமாகக் கைக்கொண்டு வாழுமாறு தனது நான்கு பக்க மேய்ப்புப்பணி அறிக்கையில் கேட்டுள்ளார் பேராயர் villegas. பிலிப்பைன்ஸ் நாட்டை உலுக்கியுள்ள பெரிய அரசியல் ஊழல் பற்றியும் குறிப்பிட்ட பேராயர் villegas, ஊழல் புரிந்தவர்களை குற்றவாளிகள் என சுட்டிக்காட்டுவது மிகவும் எளிது, ஆனால் அதில் தனக்கு எவ்வளவு பங்கு கிடைத்தது என்பதைச் சொல்வதற்கு நிறையத் துணிச்சலும் நேர்மையும் தேவை என்றும் கூறினார். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 2015ம் ஆண்டு ஜனவரியில் பிலிப்பைன்ஸ் நாட்டுக்குத் திருப்பயணம் மேற்கொள்ளவுள்ளார். பிலிப்பைன்சில் 2014ம் ஆண்டு பொதுநிலையினர் ஆண்டாக சிறப்பிக்கப்படுகிறது.

## இஸ்ரயேல் பலஸ்தீனா நாடுகளில் குழந்தைகளை பறிகொடுத்துள்ள அன்னையர் அழுகுரல் கேட்கிறது – புனித பூமி ஆயர்கள்

இஸ்ரயேல் பலஸ்தீனம் ஆகிய நாடுகளிலும் தங்கள் குழந்தைகளை பறிகொடுத்துள்ள அன்னையர் எழுப்பும் அழுகுரல் கேட்கின்றது என்று புனித பூமியின் கத்தோலிக்க ஆயர்கள் கூறியுள்ளனர். புனித பூமியின் ஆயர்கள் பேரவையின் நீதி அமைதிப் பணிக் குழு ஜீலை 08 செவ்வாயன்று விடுத்துள்ள ஓர் அறிக்கையில், அண்மையில் இவ்விரு நாடுகளுக்கும் இடையே வெடித்துள்ள வன்முறைகளால் அப்பாவி இளையோர் உயிரிழந்துள்ளனர் என்றும், ஊடகங்களின் கவனத்திற்கு வராமல் இறக்கும் பல நூறு மரணங்கள் தொடர்கின்றன என்றும் கூறப்பட்டுள்ளது. துணிவான மாற்றங்களுக்கு அழைப்பு, வன்முறையைத் தூண்டும் மொழிப் பயன்பாடு, வன்முறை வட்டத்தை உடைத்தல், மாற்றங்கள் நடைபெற மதத்தலைவர்களின் பங்கு என்ற பல தலைப்புக்களில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. மதத்தலைவர்கள் பயன்படுத்தும் வார்த்தைகள் மிகஆழமான தாக்கங்களை உருவாக்கும் சக்தி பெற்றதால், அவர்கள் அமைதியை வளர்க்கும் வார்த்தைகளையே மக்களிடம் எடுத்துரைக்க வேண்டும் என்று ஆயர்களின் அறிக்கை விண்ணப்பித்துள்ளது.

**ஆதாரம் வத்திக்கான் வானொலி**

## திருத்தந்தை பிரான்சிஸ் – ஏழு இறையடியார்களை புனித நிலைக்கு உயர்த்தும் பணிகளை துவக்க அனுமதி




ஜீலை 09. 2014 ஏழு இறையடியார்களின் புண்ணிய வாழ்வு குறித்த ஆய்வுகளை மேற்கொண்டு, அவர்களை புனிதர் நிலைக்கு உயர்த்தும் பணிகளைத் துவக்கும் அனுமதியை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஜீலை 08, இச் செவ்வாயன்று வழங்கினார். புனிதர் நிலைக்குப் பரிந்துரைக்கும் திருப்பீடப் பேராயத்தின் தலைவர் கர்தினால் ஆஞ்சலோ அமாத்தோ அவர்கள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை இச்செவ்வான்று திருப்பீடத்தில் சந்தித்து, ஏழு இறையடியார்களின் பெயர்களைப் பரிந்துரைத்த போது, திருத்தந்தை இந்த அனுமதியை வழங்கினார்.இத்தாலியில் 1961ம் ஆண்டு பிறந்து, 1983ம்ஆண்டு இறைவனடி சேர்ந்த பொதுநிலையினர் Marcello Candia, மற்றும் மூன்று அருள்பணியாளர்கள், மூன்று அருள்சகோதரிகள் என ஏழுபேரை, புனிதர் நிலைக்கு உயர்த்தும் பணிகளை துவக்க திருத்தந்தை அனுமதி வழங்கியுள்ளார். இந்த ஏழு இறையடியார்களில் மூவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர்கள், இருவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்கள், மற்றும் துருக்கி, போர்த்துக்கல், இஸ்பெயின் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள். இந்த ஏழு பேரில் மூவர் துறவு சபைகளை நிறுவியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## புலம்பெயர்ந்தோர் காட்டும் துணிவும் உறுதியும் நமக்குப் பாடங்களாக அமைகின்றன – கர்தினால் மரதியாகா



ஜீலை10.2014 நடைபெற்றுவரும் உலகக் கோப்பை கால்பந்தாட்டக் குழுக்களை காணும்போது ஒவ்வொரு குழுவிலும் வேற்று நாடுகளிலிருந்துபுலம்பெயர்ந்து வந்து இணைந்துள்ள விளையாட்டு வீரர்களைக் காண முடிகிறதுஎன்று வத்திக்கான உயர் அதிகாரி ஒருவர் கூறினார். திருத்தந்தைக்கு ஆலோசனை வழங்க உருவாக்கப்பட்டுள்ள C9 என்று அழைக்கப்படும் கர்தினால்கள் குழுவின் ஒருங்கிணைப்பாளரும், அகில உலக கரித்தாஸ் அமைப்பின் தலைவருமான, கர்தினால் Oscar Rodriguez Maradiaga அவர்கள், அண்மையில் அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் வழங்கிய ஓர் உரையில் இவ்வாறு கூறினார். சட்டங்கள் மற்றும் கட்டுப்பாடுகள் வழியாக, புலம் பெயர்ந்தோரைத் தடுக்க ஒவ்வொருநாடும் எழுப்பும் அரண் போன்ற அமைப்புக்களைத் தாண்டும் மன உறுதியை நாடுவிட்டு நாடு செல்லும்மனிதர்கள் நமக்கு உணர்த்தியவண்ணம் உள்ளனர் என்பதை கர்தினால் மரதியாகா அவர்கள், தன் உரையில் வலியுறுத்தினார். நாடுகள் என்ற எல்லைகள் இல்லாத கத்தோலிக்கத் திருஅவை, புலம் பெயர்ந்தோர் சார்பில் தொடர்ந்து போராடி வருகிறது என்பதையும் கர்தினால் மரதியாக அவர்கள், தன் உரையில் எடுத்துரைத்தார்.

## திருத்தந்தையின் tweitter செய்தி - உங்களை இறைவனின் கரங்களில் ஒப்படைக்க அஞ்ச வேண்டாம்



ஜீலை 10. 2014 உங்களை இறைவனின் கரங்களில் ஒப்படைக்க அஞ்ச வேண்டாம். அவர் உங்களிடமிருந்து எதைக்கேட்டாலும், அதற்குப் பதிலாக நூறு மடங்கு திருப்பித் தருவார் என்ற வார்த்தைகளை திருத்தந்தைபிரான்சிஸ் அவர்கள், ஜீலை 10 வியாழன் தன் twitter செய்தியாக வெளியிட்டுள்ளார். இறைவனிடம் கொள்ள வேண்டிய நம்பிக்கை, இறைவனின் சலிப்பற்ற, அரவணைக்கும் அன்பு ஆகியவை திருத்தந்தையின் twitter செய்திகளில் அடிக்கடி வெளியாகிவரும். கருத்துக்கள். ஜீலை 10ம் தேதி வெளியான twitter செய்தி உட்பட திருத்தந்தையின் பெயரால் @pontifex என்ற முகவரியிலிருந்து இதுவரை 365 செய்திகள் வெளியாகியுள்ளன என்றும், இன்றைய கணக்குப்படி, திருத்தந்தையின் twitter செய்திகளைத் தொடர்வோரின் எண்ணிக்கை 42 இலட்சம் பேர் என்றும் வத்திக்கான் செய்திக் குறிப்பு கூறுகின்றது. அரபு மொழி, ஆங்கிலம். இலத்தின், இத்தாலியம், பிரெஞ்ச், ஜெர்மனியம், ஸ்பானியம், போர்த்துகீசம், போலந்து ஆகிய ஒன்பது மொழிகளில் திருத்தந்தையின் twitter செய்திகள் மக்களை ஒவ்வொரு நாளும் சென்றடைந்த வண்ணம் உள்ளன.

**ஜீலை10.2014** சாவதற்கு உதவுதல் என்ற பெயரில் ஒரு சட்டவரைவு ஜீலை 18ம் திகதி பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கடிதங்கள் எழுத வேண்டும் என்றும் பிரித்தானிய கத்தோலிக்க அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது [illegible] நடைமுறைக்கு வந்தால், வலுவிழந்த பலரை பிரித்தானிய சமுதாயம் கொன்றுவிடும் ஆபத்து உள்ளது என்று கத்தோலிக்க ஆயர்கள் கடந்த மாதம் ஒரு அனுப்பியிருந்தனர் பாராளுமன்றத்தில் இந்த சட்டவரைவு குறித்து அவசரமான விவாதங்கள் நடைபெறும் வாய்ப்பு உள்ளதென்றும்,எனவே பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தேவையான தரவுகளை தங்கள் கடிதங்கள் வழியே மக்களுக்கு அனுப்ப வேண்டும் என்றும் பிரித்தானிய கத்தோலிக்க அமைப்பு விண்ணப்பித்துள்ளது.

## FIFA 2014ன் நிறைவுக் கட்டத்தில் திருப்பீட கலாச்சார அவையின் உலகஅமைதிக்கான முயற்சி

ஜீலை12.2014 பிரேசில் நாட்டில் 2014ம் ஆண்டின் உலகக் கோப்பை கால்பந்து போட்டி இஞ் ஞாயிறு மாலை நிறைவடையவுள்ள வேளையில், "அமைதிக்காக போர் நிறுத்தம்" என்ற புது முயற்சியை இவ்வெள்ளியன்று தொடங்கியுள்ளது. திருப்பீட கலாச்சார அவை உலகக் கோப்பை கால்பந்து இறுதிப் போட்டி நடக்கும் போது, போர்கள் நிறுத்தப்பட வேண்டும் என்றும், உலகில் போர்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்களையும், போர்கள் நிறுத்தப்பட அனைவரும் செபிக்குமாறும் கேட்டுள்ளது. திருப்பீட கலாச்சாரஅவை. திருப்பீட கலாச்சாரஅவையின் தலைவர் கர்தினால் ஜான்பிரங் கோரவாசி அவர்கள் @CardRavasi என்ற தனது டுவிட்டர் பக்கத்தில், "அடக்கமான மெல்லிய ஒலி கேட்டது (1அரச.19:12)" என்ற விவிலிய சொற்கள் மூலம் இவ்அழைப்பை உலகினருக்கு விடுவித்துள்ளார். ஒலிம்பிக் போர் நிறுத்தம் போன்று உலகக் கோப்பை கால்பந்து போட்டியின் போதும் ஏன் போர் நிறுத்தம் இடம்பெறக்கூடாது என்றும் கேட்டுள்ளார் பேரருள்திரு Sanchez Alameda.

**ஆதாரம் வத்திக்கான் வானொலி**



## ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர்ப்போட்டி –07
## விடுதலைப் பயணநூல் அதிகாரம் 21–30 வரை

*இப் படிவத்திலே விடைகளை எழுதி அனுப்பவும்*

01. எத்தனை நாள்கள் நீ உன் வேலையைச் செய்வாய்?
    **விடை:**
02. தம் தந்தையையோ தம் தாயையோ அடிக்கின்றவனை என்ன செய்ய வேண்டும்?
    **விடை:**
03. ஆண்டவரின் மாட்சி எந்த மலைமேல் தங்கிற்று?
    **விடை:**
04. மோசே இரத்தத்தின் மறுபகுதியை எதன் மீது தெளித்தார்?
    **விடை:**
05. இரத்தத்தின் இருக்கை ஒன்றை எதனால் அமைப்பாய்?
    **விடை:**
06. ஒரு செக்கேல் என்பது எத்தனை கிராம்?
    **விடை:**
07. மோசே தம் துணையாளர் யாருடன் எழுந்து சென்றார்?
    **விடை:**
08. கடவுளை நீ ..................... உன் மக்களின் தலைவனை .......................
09. தீர்ப்பு கூறும் மார்புப் பட்டையில் எதை இட்டு வைப்பர்?
    **விடை:**
10. கூடாரத்தின் நுழைவிடத்திற்கான தொங்கு திரையை என்ன நிற நூலால் செய்யப்பட வேண்டும் என்று சொல்லப்படுகிறது?
    **விடை:**
11. ........................ முழுவதையும் பலிப்பீடத்தின் மேல் சுட்டெரித்துவிடும்.
12. பலிப்பீடத்தின் நீளம்,அகலம்,உயரம், எவ்வளவு?
    **விடை:**
13. எளியவரின் வழக்கில் யாது செய்யக்கூடாது?
    **விடை:**
14. ஒரு ஆண்டிற்கு எத்தனை முறை விழா எடுக்குமாறு கட்டளையிட்டார்?
    **விடை:**
15. நறுமணப் பொருள்கள் எவை?
    **விடை:**

**பெயர் :**.....................................................

**முகவரி :**...................................................

..........................................................

**பங்கு :** ...................................................

**அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 31.08.2014**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூய மரியாள் பேராலயத்தில் திரு உடல் திரு இரத்தப் பெருவிழா



## சலப்பையாறு தூய சிந்தாத்திரை மாதா திருவிழா



## சாம்பல்தீவு தூய அந்தோனியார் சிற்றாலய திறப்புவிழா



## மறைமாவட்ட விவிலிய பேச்சுப் போட்டி
## தமிழ் சிங்களம் - 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org